ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2039/4 - 2017 ඔක්තෝබර් මස 02 වැනි සඳුදා - 2017.10.02

*2039/4 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆவது உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும்
சர்வதேச வியாபார அமைச்சர்.

கொழும்பு,
2017, செத்தெம்பர் 29.

ஒழுங்குவிதிகள்

2007, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதிய 1518/4 ஆம் இலக்க, 2016 பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டண ஒழுங்குவிதிகளிலான 1 ஆம் இலக்க அட்டவணை இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

(I) 2007, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதிய 1518/4 ஆம் இலக்க, 2016 பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டண ஒழுங்குவிதிகளிலான அட்டவணை I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள பொருளும் III ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இதற்கு ஒத்திசைவான பின்வரும் கட்டணமும் நீக்கப்படுகிறது.

| நிரல் I<br><br>தொடர்<br>இல. | நிரல் II<br><br>விபரம் | நிரல் III<br><br>இறக்குமதி அனுமதிப்பத்திரக்<br>கட்டுப்பாட்டுக் கட்டணம் |
|---|---|---|
| 46 | தேயிலை<br>(சுவையூட்டப்பட்ட அல்லது<br>சுவையூட்டப்படாத) | செ. கா. ச. பெறுமதியில் 1% |

1A - PG 3711 — 607 (2017/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(II) 2007, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதிய 1518/4 ஆம் இலக்க, 2016 பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டண ஒழுங்குவிதிகளிலான அட்டவணை I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள பொருளும் III ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இதற்கு ஒத்திசைவான பின்வரும் கட்டணமும் சேர்க்கப்படுகிறது.

| நிரல் I<br><br>தொடர்<br>இல. | நிரல் II<br><br>விபரம் | நிரல் III<br><br>இறக்குமதி அனுமதிப்பத்திரக்<br>கட்டுப்பாட்டுக் கட்டணம் |
|---|---|---|
| 46 | மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் தேயிலை (சுவையூட்டப்பட்ட அல்லது சுவையூட்டப்படாத) | அனுமதிப்பத்திரமொன்றுக்கு ரூபா 1,000.00 |

10- 533

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.